## 26

# இஸ்லாமிய இல்லம்

இவ்வுலகில் படைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு உயிரினத்திற்கும் அல்லாஹ்வினால் வழங்கப்பட்டுள்ள அருள்களுள் ஒன்றே உறைவிடமாகும். உணவு, உடை போன்றே ஒவ்வொரு உயிரினமும் தனக்கான உறைவிடத்தை தேடிக்கொள்வதற்கான முயற்சிகளை மேற் கொள்வதை நாம் காண்கிறோம். அவ்வாறே, மனிதனுக்கு அல்லாஹ் வினால் வழங்கப்பட்டுள்ள பல்வேறு பாக்கியங்களில் ஒன்றாக அமைதியான இல்லத்தை இஸ்லாம் கருதுகிறது.

## இஸ்லாமிய இல்லம் அமைதியின் தளம்

இஸ்லாம் குடும்ப வாழ்க்கைக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. அந்தக் குடும்பம் என்ற அலகு அழகானதோர் இல்லத்தின் மூலமே ஆரோக்கியமாக உருவாகும் என்பது இஸ்லாத்தின் கருத்தாகும். இதனை அல்லாஹ் தனது திருமறை வாயிலாக நமக்குச் சுட்டிக் காட்டுகின்றான்:

**அல்லாஹ் உங்களுக்கு உங்கள் இல்லங்களை அமைதித் தளமாக ஏற்படுத்தியுள்ளான். (16:80)**

## இறை நினைவில் இனிய இல்லம்

ஒரு முஃமினுடைய வீடு, இறைவனை நினைவுகூரும் இல்லமாக இருக்க வேண்டும். அங்கு இறை வசனங்கள் ஓதப்பட வேண்டும். மார்க்கம் போதிக்கப்பட வேண்டும். ''உங்கள் வீடுகளில் கூறப்படும் அல்லாஹ்வின் வசனங்களையும், ஞானத்தையும் நினையுங்கள்! அல்லாஹ் நுணுக்கமானவனாகவும், நன்கறிந்தவனாகவும், இருக்கிறான்'' *(அல் குர்ஆன் 33:34)*

இறைவன் நினைவுகூரப்படும் இல்லத்திற்கும் இறை நினைவை இழந்த இல்லத்திற்கும் இறைத்தூதர் காட்டும் உவமையைப் பாருங்கள். நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் நினைவுகூரப்பட்டுப் போற்றப்படும் இல்லத்தின் நிலை உயிருள்ளவர்களின் நிலைக்கும், அல்லாஹ் நினைவுகூரப்பட்டுப் போற்றப்படாத இல்லத்தின் நிலை உயிரற்றவனின் நிலைக்கும் ஒத்திருக் கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: உங்களது தொழுகைகளில் சிலவற்றை உங்களுடைய இல்லங்களிலும் நிறைவேற்றுங்கள். உங்களுடைய இல்லங்களை கப்று (புதைகுழி)களாக ஆக்கிவிடாதீர்கள். (புகாரி)

நாம் உயிரோடு இருந்தும் நம்முடைய வீட்டில் இறைவன் நினைவுகூரப்படவில்லையென்றால், அங்கு மார்க்க ஞானங்கள் போதிக்கப்பட வில்லை என்றால் நம்முடைய வீடும், கப்ரும் ஒன்று தான். ஒரு சிறிய வித்தியாசம் அங்கு உயிரிழந்தவர்கள் உள்ளார்கள். இங்கு உள்ளம் மரணித்தவர்கள் உள்ளார்கள்.

''உங்கள் வீடுகளில் ஸூரத்துல் பகராவை ஓதுங்கள்! ஏனெனில் எந்த வீட்டில் ஸூரத்துல் பகறா ஓதப்படுகின்றதோ அந்த வீட்டில் ஷைத்தான் நுழைய மாட்டான்!'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (தபரானி)

## வீடு அமைதியின் அடித்தளம்

''உங்கள் வீடுகளை அல்லாஹ் உங்களுக்கு அமைதி தருவதாக அமைத்தான். கால்நடைகளின் தோல்களை நீங்கள் வீடுகளாக அமைக்க (வசதியான விதத்தில்) உங்களுக்காக அவன் படைத்திருக்கிறான். அது நீ ங்கள் பிரயாணம் போகும் சமயத்திலும் ஓரிடத்தில் தங்கும் சமயத்திலும் எளிதில் சுமந்து செல்லக் கூடியதாக இருக்கின்றது…'' (16:80)



இந்த வசனம் வீடு என்பது மனிதனுக்கு அமைதியையும், பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் வழங்கும் இடமாக இருப்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

‘‘தனது வீட்டில் ஒருவர் அமர்ந்து அதனால் அவரது பிரச்சினையிலிருந்து மக்களும், மக்களது பிரச்சினையிலிருந்து அவரும் பாதுகாப்புப் பெறுகின்றாரோ அத்தகைய மனிதர் அல்லாஹ்வின் பொறுப்பில் இருக்கின்றார்’’

## இஸ்லாமிய இல்லம் ஒரு கல்விக் கூடம்

வீட்டைக் கல்விக் கூடமாகப் பாவிப்பது மிக அவசியமாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது மனைவியருக்கு வீட்டில் வைத்துத்தான் மார்க்கத்தைப் போதித்தார்கள். குழந்தைகளுக்கு இஸ்லாமியப் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுத்தார்கள். எனவே எமது வீடுகளும் கல்வியைத் தூண்டும் விதத்தில் அமையப்பெறுதல் வேண்டும். ஆல்குர்ஆன் ஓதுதல், இஸ்லாமிய நூல்களை வாசித்தல், அறிவியல் ரீதியான இறுவட்டுக்கள், சஞ்சிகைகள் என்பவற்றை வைத்திருத்தல் என்பன வரவேற்கத்தக்கனவாகும்.



## வீட்டுச் சூழலில் கடைப்பிடிக்க வேண்டியவை

1. வீட்டினுள் நுழைய முன் ஸலாம் கூறிக்கொள்ளல். பதில் ஸலாம் கிடைத்தால் மட்டுமே உள்ளே நுழைய வேண்டும். இதனை ஏற்கனவே நாம் கற்ற பின்வரும் வசனம் தெளிவுபடுத்துகின்றது.

"விசுவாம் கொண்டோரே! உங்கள் வீடுகள் அல்லாத வேறு வீடுகளில் நீங்கள் நுழைய அவசியம் ஏற்பட்டால் அவ்வீடுகளில் உள்ளவர்களிடம் நீங்கள் அனுமதி கோரி அவ்வீடுகளில் உள்ளோருக்கு ஸலாம் கூறாத வரை (அவற்றில்) நுழைய வேண்டாம்" (24:27)

அங்கே எவரையும் நீங்கள் காணாவிட்டால் உங்களுக்கு அனுமதி அளிக்கப்படும் வரை அங்கே நுழையாதீர்கள்! "திரும்பி விடுங்கள்!" என்று உங்களுக்குக் கூறப்பட்டால் திரும்பி விடுங்கள்! அதுவே உங்களுக்குப் பரிசுத்தமானது. நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிந்தவன். (24 : 28)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருவருடைய இல்லத்திற்குச் செல்லும்போது மூன்று முறை ஸலாம் கூறி அனுமதி கோருவார்கள். பதில் வந்தால் வீட்டின் உள்ளே செல்வார்கள். இல்லையென்றால் திரும்பிச் சென்றுவிடுவார்கள்.

2. வீட்டினுள் நுழையும்போது

بِسْمِ اللهِ وَلَجْنَا , وَبِسْمِ اللهِ خَرَجْنَا , وَعَلَى اللهِ رَبِّنَا تَوَكَّلْنَا

என்று ஓதிக் கொள்ளல்

3. குடும்பத்தில் அனைத்து உறவினர்களுடனும் சகோதரத்துவத்துடன் நடந்துகொள்ளல். விட்டுக்கொடுத்தல், தர்மம் செய்தல், விருந்தோம்பல், இங்கிதமாகப் பேசுதல் போன்ற நற்பழக்கங்களைக் கடைப்பிடித்தல்.

4. பொய், பொறாமை, கோள், புறம் போன்ற குடும்ப உறவுகளைப் பாதிக்கும் மோசமான பண்புகளை விட்டும் தவிர்ந்து கொள்ளல்.

5. எப்போதும் வீட்டையும் வீட்டுச் சூழலையும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருத்தல்.

6. வீட்டுப்பாவனைப் பொருட்களை ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் சுத்தமாகவும் வைத்திருத்தல்

## பயிற்சி

(அ) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

1. வசதியான உறைவிடம் கிடைப்பது அல்லாஹ்வின் அருளாகும். ( )
2. வீடு அல்லாஹ்வை நினைவுபடுத்தும் இடமாக இருக்க வேண்டியதில்லை. ( )
3. வீட்டைப் புதைகுழிகளாக்க வேண்டாமென நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ( )
4. குடும்ப அலகு வீட்டிலேயே அமைதி பெறுகிறது. ( )
5. உறைவிடம் எல்லாப் படைப்பினங்களுக்கும் பாதுகாப்பு வழங்குகிறது. ( )
6. வீட்டுக்கு வருபவரைத் ''திரும்பிவிடுங்கள்'' எனக் கூறுவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். ( )
7. வீட்டையும் சூழலையும் சுத்தமாக வைப்பது நல்ல பழக்க மாகும். ( )

(ஆ) வீட்டில் பேண வேண்டிய ஒழுக்கங்கள் ஐந்தைக் குறிப்பிடுக.

(இ) வீடானது எவ்வாறு கல்விக் கூடமாக இயங்க முடியும் என்பதை எடுத்துக்காட்டுக.